பயனாகும். அறம், சுயநல நோக்கிலும் பிறருக்கு உதவி செய்யும் செயல்வகை மூலமும் வரும் பொருள் இரண்டாவது பயனாகக் கருதப்படுகிறது. கல்வி, மருத்துவம், உழவு, கருவிகள் செய்தல் முதலிய தொழில்கள் செய்து பொருள் சேர்த்தல் நன்று. தான, தருமம் முதலிய தொண்டுகளால் விளையும் அருட்பொருளுக்கு ஈடுபடுத்துதல் நன்று. இவை உலக வழக்கத்தில் உள்ள இயல்பு வாழ்க்கையாகும். இறைவனின் அருட்செல்வம் பெற உண்மை உணர்வுடன் பற்றற்று புலனடக்கத்துடன் இருத்தலே வீடு பேறு அடைவதற்குரிய சிறந்த சிறந்த வழியாகும்.

## முடிவுரை

சித்தர் பாடல்கள் பெரும்பாலும் உணர்த்துவது உலகில் பிறந்த உயிர்கள் அனைத்தும் ஆண்டவன் திருவடியை அடைய வேண்டும் என்பதாகும். திருவடிப்பேறு எய்திட மனிதனுக்கு தடையாக இருக்கும் பற்றுக்களை நீக்கியும், மனத்தை அடக்கி யோக முறையில் ஈடுபடுத்தவும் அறிவுறுத்தினர். நிலையாமை தத்துவத்தை உணர்த்திய சித்தர்கள் பற்றற்ற வாழ்வின் மூலம் மண் ஆசை, பெண்ணாசை, பொன்னாசை ஆகியவற்றை வெறுத்தனர். இவ்வாறு பற்றற்ற துறவிகள் பல சித்தர்களைப் பின்பற்றி பட்டினத்தார் தம் பாடல்களில் நிலையாமை, புலனடக்கம், வாழ்வியல் நெறிகளை பற்றி கூறியமை அறிய முடிகிறது.

## அடிக்குறிப்புகள்

1. திருக்குறள் ,பரிமேலழகர் உரை ,பா. எண் -785,8 ஆம் பதிப்பு ,2022,
ராம் பிரசுரம்,சென்னை.



2. திருவேகம்பமாலை ,பா. எண்-13,பட்டினத்தார் பாடல்கள் ,ப.எண்-51,எட்டாம் பதிப்பு ,2018,கங்கை புத்தக நிலையம்,சென்னை.
3. திருவருட்பா 6 ஆம் திருமுறை மூலமும் உரையும்,9 ஆம் தொகுதி,ஔவை.சு.துரைசாமிப் பிள்ளை, அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளியீடு,பா. எண் 4602,பக். எண்-548
4. விநாயகர் அகவல் ,ஔவைப்பிராட்டி அருளியது, பக்.எண்-2,பா. வரி-33-43,2 ஆம் பதிப்பு,1958,ஸ்ரீ காமகோடி கோசஸ்தானம்,சென்னை .
5. பட்டினத்தார் பாடல்கள் ,முதல்வன் முறையீடு ,பா.எண் -11,பக். எண்-182,2018,கங்கை புத்தக நிலையம்,சென்னை.

....

ஞானக்கண்ணால் பார்க்கும் பயிற்சிகள் வேண்டும். பித்தாடும் மாயை உடையது இவ்வுலகம் என்பதை ராமலிங்க சுவாமிகள்

" பித்தாடும் மாயைக்கு மேலே- சுத்தப்
பிரம்மம் வெளியினின் பேரருளாலே
சித்தாடுகின்றது பாரீர் -திருச்
சிற்றம்பலத்தே திருநட ஜோதி"[3]

என்று குறிப்பிடுகிறார் இவ்வுலகத்தை தாண்டி பரவெளியில் நம் பார்வை சதாகாலமும் பதிந்திருக்க வேண்டும். அப்போது வானுறையும் தெய்வங்கள் கூட கண்டறியாத காட்சிகள் பலவற்றை நாம் காண முடியும் என்கிறார் ராமலிங்க சுவாமிகள். இந்தக் கருத்துக்கள் மக்களிடையே சென்று சேர கவியரசு கண்ணதாசன் அவர்களும் திரைப்படப் பாடலிலே எடுத்தாண்டுள்ளார் என்பது அனைவரும் அறிந்த செய்தியே.

## புலனடக்கம்

எல்லாக் குற்றங்களுக்கும் மனமே அடிப்படை காரணமாக அமைகிறது. மனம் ஒடுங்கக் கற்றலே சிறந்த கல்வியாகும். மனதின் மூலம் கண்டவர்களே அதை அடக்கவும் கற்றிருக்கிறார்கள். மன ஓட்டத்தை நிறுத்தும் உபாயங்களும் தந்திருக்கின்றனர். அவ்வையார் கணபதியிடம் இறைஞ்சி வேண்டுகிற கருத்தைப் பார்த்து நமக்குத் தெளிவு பிறக்கும்.

" ஒன்பது வாயில் ஒரு மந்திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதும் காட்டி....
மூலா தாரத்தின் மூண்டெழுகனலக்
காலால் எழுப்பும் கருத்தறிவித்தே" [4]

என்று அவ்வையார் தம் பிரார்த்தனையில், தம் அனுபவங்களையும் சேர்த்தே சொல்லுகிறார். பட்டினத்தாரும் புலனடக்க மின்மையையும், அது தரும் துன்பத்தை,

'ஐந்து புலனு மடங்கேனே யென்குதே



சிந்தை தவிக்கிறதுந் தேறேனே யென்குதே'[5]

என்றுக் குறிப்பிடுகிறார். 'மனம் போல் வாழ்க்கை அமையும்' என்பார் பெரியோர் வாக்கு. வேலை, தொழில், வியாபாரம், உத்தியோகம் என்று எல்லாவற்றுடனும் ஆன்மிகத்தை இணைத்து எல்லோரும் தின ஒழுக்கத்தை புலனடக்கத்துடன் வழக்கமாக்கி கொண்டால் மனித வாழ்வு அமைதி பெறும்.

## இன்றைய வாழ்வியல்

உலகத்தில் படைக்கப்பட்டவை எல்லாம் மனிதனுக்கு என்று இறைவாக்கியத்தை மனிதன் தன் போக்கில் அனுபவித்து அழிவு பாதையில் செல்கிறான். ஆடு மாடுகளை அடித்து கூறிட்டு கூவி விற்று இலாப நோக்கில் செயல்படுவதையும் காண்கிறோம். தாய் தந்தை சம்பாதித்த பொருளை பங்கு போட்டு விட்டு பற்றாக்குறை என்று கூற்றலிட்டு வழக்காடு மன்றங்களில் செல்வதை பார்க்கின்றோம். நாட்டால், இனத்தால், மொழியால், மதத்தால் வேறுபட்டுக்கொண்டு மக்கள் மடிந்து கொண்டிருக்கிற அவலத்தை காண நேர்கிறது. வறுமையால், நோயால், துக்கத்தால், துவண்டு இறப்பை எண்ணி வருந்துகின்ற நிலைகளையும் பார்க்க முடிகிறது. இவை யாவற்றிற்கும் காரணம் மக்களிடையே தம்மை குறித்த விழிப்புணர்வின்மை. பெரும்பாலும் நடைமுறையில் உள்ள வாழ்வியல் அவலங்களையும், சிக்கல்களையும், துன்பங்களையும், சமுதாய நோய்களான கொலை, கொள்ளை, உடலில் வந்த, வரும் நோய்களையும் களையலாம். நிலையாமையை உணர்ந்து இறை வழியில் சென்றால் தேவையற்ற இழப்பையும் தடுக்கலாம். இறவா பெரு நெறியை அடையலாம் என்பது சித்தர்கள் கண்ட உண்மையாகும்.

உருவத்தால் மனித தேகத்தை பெற்றதால் உண்டாகும் பயன் யாதெனில் அறத்தால் வரும் பொருள் ஈட்டுதல் முதலாவது

நற்பண்புகளை செய்தலே இறைவனை அடையும் வழி என்ற உயர்ந்த தத்துவத்தினை தம் பாடல் மூலம் விளக்கிய திறம் குறித்தும் வாழ்வியல் கருத்துக்களையும் இக்கட்டுரை எடுத்துரைக்கிறது.

**கருச்சொற்கள்**

சித்தர், பட்டினத்தார், நிலையாமை, புலனடக்கம், வாழ்வியல்

**முன்னுரை**

மனித இனத்திற்கு வலிமையை உயர்த்துவது கல்வி அறிவாகும். புலனடக்கம், மன அடக்கம், சித்தத்தை ஒருநிலைப் படுத்துதல் ஆகிய கல்வியை கற்பிக்கும் கருத்துக்கருவூலங்களே சித்தர் பாடல்கள்.'யாதும் ஊரே யாவரும் கேளிர்'எல்லா ஊரும் தன் ஊரே எல்லா மக்களும் தம் மக்கள் என வாழும் அதே சமயம் உலகியல் நிலைகளைக் கடந்தும் வந்திருக்கின்ற இச் சித்தர்களை புலம்பிடித்து இனம் பிரித்து பார்ப்பது என்பது அரிதாகும். திருமூலர் தொடங்கி சித்தர் பலரும் மருத்துவம், யோகம், தத்துவம் முதலியவற்றை தம் குறிக்கோள்களாகக் கொண்டு வாழ்ந்தனர். இவர்களுடைய பாடலில் குறிப்பு மொழியும் குழூஉகக்குறியுமே பெரும்பாலும் காணப்படுகின்றது. அறிவியல் வளர்ச்சி, வேகமான வாழ்க்கை சூழல், நாகரிக மாற்றமும் போன்ற வற்றால் மானுட வாழ்வில் மாற்றங்கள் பல தோன்றியுள்ளன. இதனால் இன்றைய சூழல் மனக்குழப்பம், சஞ்சலங்கள், வாழ்வியல் பிரச்சனைகள், கவலைகள் சூழ்ந்துள்ளன. இத்தகைய நிலைகளின் வழிபாடுகளும், சிவத் தொண்டுகளும் எத்தகைய நலன்களைத் தருகின்றது என்பதை சமய ரீதியாகவும், சமுதாய ரீதியாகவும் பல தொண்டுகளை செய்துள்ள பட்டினத்தடிகளின் பாடல் மூலம் வாழ்வியல் கருத்துக்களை இக்கட்டுரையில் காணலாம் .



**நிலையாமை**

உடம்பிற்கும், உயிருக்கும் உள்ள தொடர்பு என்பதே உணர்வுதான். உணர்வு என்பது உயிருக்கும் உள்ளத்திற்கும் உள்ள தொடர்பே ஆகும். ஒத்த உணர்வுகள் உயிரினங்களை வாழ வைக்கும். ஒத்த உணர்வே உயிர்ப் பண்பை கூட்டுவிக்கும். இப்படி உடம்போடும் உள்ளத்தோடும் தொடர்புடைய உணர்ச்சியானது உடம்பும், உள்ளமும் தளரத் தானும் மங்கியும் மறைந்தும் விடுகிறது. பின் எதை பழக்குதல் வேண்டும் என்றால் உணர்ச்சியை பழக்குதல் வேண்டும். இங்கே

" புணர்ச்சி பழகுதல் வேண்டாம் உணர்ச்சி தான்
நட்பாங் கிழமை தரும்"[1]

சிறந்த நட்பிற்கு ஒத்த உணர்ச்சியே மேன்மை தர வல்லது என்று வள்ளுவனாரின் கருத்தையும் நினைவு கூறுதல் வேண்டும். ஆதலால், உடல் நான் அல்ல உயிர்தான் நான் என்ற திடமான எண்ணம் கொண்டால் அது மரணம் இல்லாத ஒரு வாழ்விற்கு முதற்படி ஆகும். ஊர் முதலிய பொருட் சார்பும், உற்றார் முதலிய உயிர் சார்பும் மாயா காரியங்களாகலின் அவை தோன்றி நின்று அழிவனவாகும். அவற்றின் மீது பற்று கொண்டோர்க்கு நிலையாமையின் உண்மை நிலை அறிவுறுத்த,

'ஊருஞ் சதமல்ல வுற்றார் சதமல்ல வுற்றுப்பெற்ற
பேருஞ் சதமல்ல பெண்டீர் சதமல்ல பிள்ளைகளுஞ்
சீருஞ் சதமல்ல செல்வஞ் சதமல்ல தேசத்திலே
யாருஞ் சதமல்ல நின்றான் சதங்கச்சி யேகம்பனே'[2]

பட்டினத்தார் தம் பாடல்களிலே நிலையாமை பற்றி இவ்வாறு கூறியுள்ளார். ஊனக் கண்களால் நாம் கண்டறியும் காட்சிகள் உலகக் காட்சிகள் ஆகும். அப்படி இருக்கின்ற இந்த உலகத்தை மனக் கண்ணால் பார்த்து இவை மறைய கூடியவை, அழியக்கூடியவை என்ற அறிந்து பின் அது கடக்க

# 19. பட்டினத்தார் பாடல் கூறும் வாழ்வியல்

**ச. வித்யாகுமாரி ,**
முனைவர் பட்ட ஆய்வாளர் ,
தமிழ்த்துறை ,மொழிகள் புலம்,
வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப
உயர் ஆராய்ச்சி நிறுவனம் ,
பல்லாவரம்,சென்னை -600 1117.

**ஆய்வுச் சுருக்கம்**

பகுத்தறிவு என்பது நன்மை, தீமை, உண்மைகளை அறிவதாகும். இது எதையும் தள்ளாது அல்லது கொள்ளாது. சீர்தூக்கி செயல்படும் அரசாங்கங்களும், நாடுகளும் உண்டாக்க முயலும் சகோதரத்துவத்தை, சமதர்மத்தை, தம் பாடலின் வழியாக உணர்த்திக் காட்டுபவர்களே சித்தர்கள். அவர்களில் அரிய தத்துவச்சுவடாய் வாழ்ந்தவர் பட்டினத்தார். 'காதற்ற ஊசியும் வாராது காணும் கடை வழிக்கே' என்ற அவரின் ஞானமுதிர்ச்சி யானது வாழ்வியல் சிந்தனைகளை பலவாறு எடுத்து இயம்பி யுள்ளார். அறிவையும், அனுபவத்தையும் ஒரு சேர இணைத்து மெய்யுணர்வின் மிகுதியால் மனித இனம் சிறக்க இவர் அருளிய பாடல்கள் ஏராளம். வாழ்க்கை என்பது கானல் நீரைப்போன்றது என்பதும், மனிதனின் உடல், இளமை, செல்வம், நடைமுறை முதலிய அனைத்தும் மாறுதல்களுக்கு உட்பட்டது என்றும் பட்டினத்தார் தெள்ளிதின் கண்டு உரைத்துள்ளார். அவ்வகையில், இவர் தம் படைப்புகள் வாழ்வியலையும் மனிதத் தன்மையையும் உணர்த்துவதாக அமைந்துள்ளது. பட்டினத்தார் பாடல்களின் வழி நிலையாமை, வாழ்வியல் நற்பண்புகள் போன்றவை இவ்வாய்வின் வழி உணர்த்தப்படுகிறது. உள்ளன்போடு இறைவனை வழிபடல்,

| | | | |
|---|---|---|---|
| 16. | முனைவர் க. அமரேசன் | தற்காலத்தில் பௌத்த வாழ்முறையின் தேவை | 170 |
| 17. | திரு. ம.கார்த்திக் | பன்முகப் பார்வையில் மாணிக்கவாசகரின் இறைநெறி (திருவாசகம்) | 178 |
| 18. | முனைவர். திருமதி ந.கோமதி | சிலப்பதிகாரத்தில் சமண சமயக் கோட்பாடுகள் | 187 |
| 19. | ச. வித்யாகுமாரி | பட்டினத்தார் பாடல் கூறும் வாழ்வியல் | 195 |
| 20. | முனைவர்.கி.சங்கர்தேவி | மணிமேகலையில் சமயக் கோட்பாடுகள் | 202 |
| 21. | தயானந்தராசா லுகர்சன் (இலங்கை) | பன்னிரு திருமுறைகள் | 208 |
| 22. | முனைவர் ஆ. தர்மராஜன் | மாணிக்கவாசகரின் திருக்கோவையார் முன்னிறுத்தும் தமிழ்ப்பண்பாடு | 215 |
| 23. | முனைவர் சு. சிவசந்திரகுமார் | சலேசிய இலக்கியத் தமிழ் அகரமுதலி : கணினி செயலி உருவாக்க முறைமைகள் | 227 |
| 24. | முனைவர் இரா. கந்தசாமி | தமிழ்ச் சித்தர் மரபில் கொங்கணரின் பெண்ணாதாரக் குரல் | 239 |
| 25. | முனைவர் ரே.ராமகிருஷ்ணன் | ஆழ்வார்களின் பொற்காலம் | 249 |
| 26. | தயவு திரு முனைவர் சுவாமி சுப்ரமணியம் | திரு அருட்பிரகாச வள்ளலார் என்னும் அருட்பெருஞ்ஜோதி | 261 |
| 27. | மு. சத்தியா | ஸ்ரீ பார்சுவநாதர் அம்மானையில் சமண சமய நெறிகள் | 271 |
| 28. | முனைவர் வி.ரா.பிந்து குமாரி | காரைக்கால் அம்மையாரின் பக்தியும் முக்தியும் | 284 |
| 29. | முனைவர் து.ஜெமிலா மார்ஷல் | திருக்குறளில் திருவிவிலியக் கோட்பாட்டின் தாக்கம் | 293 |
| 30. | அ.சகாய ஜெசி கலா | கிறித்துவச் சமயம் : நாட்டார் வழிபாட்டு முறை | 300 |

# நூல்விவரக் குறிப்பு


| | | |
|---|---|---|
| நூல் தலைப்பு | : | உலகச் சமயங்களும் தமிழ் இலக்கிய வளர்ச்சியும் |
| முதன்மைப் பதிப்பாசிரியர்கள் | : | பேரா.முனைவர் டி.எஸ். பிரேமா கோபிநாத் ஸ்டாலின் |
| வெளியீடு | : | உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் இரண்டாம் முதன்மைச் சாலை மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம், தரமணி, சென்னை - 113 தொலைபேசி எண் 044-22542992 |
| பதிப்பு உரிமை | : | உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் |
| வெளியீட்டு எண் | : | 1164 |
| ISBN NO. | : | 978-81-985463-8-8 |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு | : | முதற்பதிப்பு |
| பதிப்பு ஆண்டு | : | பிப்ரவரி 2025 |
| பயன்படுத்திய தாள் | : | 18.6 வெள்ளை மேப்லித்தோ |
| நூலின் அளவு | : | 1/8 டெம்மி |
| எழுத்தின் அளவு | : | 11 புள்ளி |
| பக்க எண்ணிக்கை | : | 642 |
| அச்சுப்படிகளின் எண்ணிக்கை | : | 1200 |
| தாள் | : | மேப்லித்தோ |
| விலை | : | உரூபா. 575 |
| நூலாக்கம் | : | முனைவர் எ.இராஜேஷ் |
| அச்சகம் | : | |
| பாடம் | : | பன்னாட்டுக் கருத்தரங்க ஆய்வுக் கோவை |



நூல் ஆசிரியர் கருத்துகளுக்கு நிறுவனம் பொறுப்பன்று

# உலகச் சமயங்களும்

# தமிழ் இலக்கிய வளர்ச்சியும்

(பன்னாட்டுக் கருத்தரங்க ஆய்வுக் கோவை )

**முதன்மைப் பதிப்பாசிரியர்கள்**

பேரா. முனைவர் டி.எஸ். பிரேமா

திரு. கோபிநாத் ஸ்டாலின்



**பதிப்பாசிரியர் குழு**

முனைவர் து. ஜானகி

முனைவர் பொன். சண்முகம்

முனைவர் ஸ்ரீ. பிரேம் குமார்

திரு. ம. கார்த்திக்

முனைவர் எ. இராஜேஷ்

**தூய தாமஸ் கலை மற்றும் அறிவியல் கல்லூரி**

**உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்**

# உலகச் சமயங்களும் தமிழ் இலக்கிய வளர்ச்சியும்

(பன்னாட்டுக் கருத்தரங்க ஆய்வுக் கோவை)

முதன்மைப் பதிப்பாசிரியர்கள்

பேரா. முனைவர் டி. எஸ். பிரேமா

கோபிநாத் ஸ்டாலின்



பதிப்பாசிரியர் குழு

முனைவர் து. ஜானகி

முனைவர் பொன். சண்முகம்

முனைவர் ஸ்ரீ. பிரேம் குமார்

திரு. ம. கார்த்திக்

முனைவர் எ. இராஜேஷ்

தூய தாமஸ் கலை மற்றும் அறிவியல் கல்லூரி

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்